Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 15, 2023

வியாழக்கிழமை 15 ஜூன், 2023 | ஒளி: 09 கதிர்: 019 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ | FREE

# இராணுவ வைத்தியர் குழு கின்னஸ் சாதனை

## விசாலமான சிறுநீரக கல் அகற்றப்பட்டது

கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் கடந்த ஜூன் முதலாம் திகதி மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் போது, ஒருவருக்கு சிறுநீரகத்துக்கு அருகில் உருவாகியிருந்த மிக நீளமானதும் மிகப்பெரியதுமான கல்லை அகற்றி, வைத்தியர் குழு கின்னஸ் உலக சாதனையை படைத்துள்ளது.

தொடர்ச்சி P2

# 30 நாள்கள் தாண்ட முன்னர் 300 ஐ தாண்டியது டொலர்

கடந்த மே மாதம் 18ஆம் திகதி 300 ரூபாயை விட குறைந்திருந்த இலங்கை ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி மீண்டும், புதன்கிழமை (14) 300 ரூபாயை விட அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் புதன்கிழமை (14) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 318 ரூபாய் 99 சதமாகவும் கொள்வனவு விலை 303 ரூபாய் 19 சதமாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

# 5,500 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

**“நாட்டுக்கு சேவை செய்யும் ஒழுக்கமான மாணவர்களை உருவாக்குவது பாடசாலை நிர்வாகங்கள் மற்றும் ஆசிரியர்களின் கடமையாகும்**

35 வயதுக்குட்பட்ட 5,500 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில்நுட்பம், மொழிகள், புவியியல், வர்த்தகம் ஆகிய பாடங்களில் விசேட கவனம் செலுத்தி மூன்று மொழிமூலமும் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட உள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதிக்கு பிரான்ஸ் ஜனாதிபதி அழைப்பு

பிரான்ஸின் பாரிஸ் நகரில் ஜூன் 22, 23 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட உலகத் தலைவர்களுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாடு ‘தற்போதைய உலகம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காணல்’ என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

உலக சமூகத்தை பாதித்துள்ள

தொடர்ச்சி P2

# உணவு பாதுகாப்பின்மை பிரச்சினை குறைந்துள்ளது

கடந்த வருடத்தின் ஜூன்/ஜூலை மாதங்களுடன் ஒப்பிடும் போது உணவு பாதுகாப்பின்மை பிரச்சினை 40% சதவீத குறைவடைந்திருப்பதாகவும் உணவு பாதுகாப்பின்மையை முகம்கொடுத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் 66,000 இல் இருந்து 10,000 வரையில் குறைவடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கை மக்களில் சுமார் 75 இலட்சம் பேருக்கு போதுமான உணவு கிடைப்பதில்லை என வெளியான ஊடக அறிக்கைகளுக்கு ஜனாதிபதி அலுவலகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# கல்வியை அடிப்படை உரிமையாக மாற்றுவோம்

சகல பிள்ளைகளுக்கும் கல்வியில் சம உரிமை பெற்றுக்கொடுப்பதே ஐக்கிய மக்கள் சக்தியினதும் தனதும் ஒரே நோக்கமாகும் எனவும், நாட்டின் அடிப்படை சட்டத்தில் கல்வி பற்றி குறிப்பிடப்படவில்லை என்றாலும் தான் நாட்டின் ஜனாதிபதியான பின்னர், மனித உரிமையான கல்வி உரிமையை இந்நாட்டில் அடிப்படை உரிமையாக ஆக்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலங்கையின் பணவீக்கம்

# ஓகஸ்டுக்குள் ஒற்றை இலக்கத்தில் குறையும்

ஓகஸ்ட் மாதத்துக்குள் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்குக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, சந்தைகள் மற்றும் பொருளாதாரம் நிலைபெற இன்னும் சில மாதங்கள் ஆகுமென ஒப்புக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ விவகாரம்:

# கடும் குற்றச்சாட்டுகளுடன் இடைக்கால மனு தாக்கல்

### இன்றையதினம் பரிசீலனை

‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பலின் சேதத்துடன் தொடர்புடைய இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக, சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் மேலும் மூன்று மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவில் இடைக்கால மனு ஒன்றை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

கடந்த 12ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுவினை அனுமதிப்பது தொடர்பில் வியாழக்கிழமை (15) உயர்நீதிமன்றத்தில் பரிசீலனை இடம்பெறவுள்ளது.

பொதுநலன் கருதியே இந்த இடைக்கால மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# இன்றுமுதல் ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்

புதிய முறைமையின் கீழ் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள், இன்று முதல் (15) ஒன்லைனில் ஏற்றுக்கொள்ளப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மூன்று நாள்களுக்குள் கடவுச்சீட்டுகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஓட்டோ கவிழ்ந்து விபத்து: 11 முன்பள்ளி சிறார்கள் காயம்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, உதயபுரம் பகுதியில் ஓட்டோ கவிழந்து விபத்துக்குள்ளானதில் காயமடைந்த முன்பள்ளி சிறுவர்கள் 11 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை காலை முன்பள்ளி சிறுவர்களை ஏற்றிச்சென்ற ஓட்டோவே கவிழ்ததாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோ சாரதியும் விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் அதிகளவில் ஏற்றிக்கொண்டு பயணித்தமையே விபத்துக்கு காரணம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# செந்தில் பாலாஜிக்கு 28 வரை சிறை

சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில், தமிழக அமைச்சர் செந்தில்பாலாஜியை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோத பண பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில்பாலாஜி, நெஞ்சுவலி காரணமாக சென்னை, ஓமந்தூரார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் செந்தில்பாலாஜி சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டுள்ளதாக கூறி, அவரது மனைவி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை அமர்விலிருந்து நீதிபதி சக்திவேல் விலகினார்.

தொடர்ச்சி P2

## வவுனியாவில் அமைந்துள்ள

# கடவுச்சீட்டு அலுவலகம் முன்பாக 5 பேர் கைது

■ க. அகரன்

வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு - குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக புதன்கிழமை (14) காலை 05 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பிராந்திய காரியாலயம் முன்பாக வரிசையில் இடத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஐந்தாயிரம் ரூபாயும், வரிசையின்றி உரிய நடைமுறைகளுக்கு அப்பால் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுக்க 25 ஆயிரம் ரூபாயும் இடைத் தரகர்களால் பெறப்படுவதாக பொதுமக்களிடமிருந்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இராணுவ வைத்தியர் குழு கின்னஸ் சாதனை

இதுவே உலகளாவிய ரீதியில் சிறுநீரகத்தில் ஏற்பட்டிருந்த மிக விசாலமான கல் என்பதனால், அதனை அகற்றியமை கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் பதியப்பட்டதாக இலங்கை இராணுவம் குறிப்பிட்டது.

அன்றையதினத்தில் இராணுவ வைத்தியசாலையில் வைத்து அப்புறப்படுத்திய சிறுநீரகக் கல் 13.372 சென்றி மீட்டர் நீளமும் 801 கிராம் எடையும் கொண்டதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு இராணுவ வைத்தியசாலையின் சிறுநீரக பிரிவின் தலைமைத்துவ மருத்துவ நிபுணர் லெப்டினன்ட் கேர்ணல், வைத்தியர் கே.சுதர்ஷனின் தலைமையில் கேப்டன் வைத்தியர் டபிள்யூ. பி.எஸ்.சி. பத்திரத்ன மற்றும் வைத்தியர் தமன்ஷா பிரேமதிலக உள்ளிட்ட வைத்திய குழாம் இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டுள்ளது.

சத்திரசிகிச்சைக்கு மயக்கவியல் நிபுணர்களான கேர்ணல் (டொக்டர்) யு.ஏ.எல்.டி பெரேரவும் கேர்ணல் (டொக்டர்) சீ.எஸ்அபேசிங்கவும் உதவியதாக இலங்கை இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

கின்னஸ் உலக சாதனை பட்டியலில் இதற்கு முன்னர் மிகப்பெரிய சிறுநீரகக் கல் அகற்றப்பட்ட சம்பவம் 2004 ஆம் ஆண்டில் இந்தியாவில் பதிவாகியுள்ளது. அது 13 சென்றி மீட்டர் நீளமுடையதாகும்.

அதிக எடை கொண்ட சீறுநீரகக் கல் 2008 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் ஒருவரின் உடலில் இருந்து அகற்றப்பட்டதுடன், அதன் எடை 620 கிராம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 30 நாட்கள் தாண்ட முன்னர் 300 ஐ தாண்டியது டொலர்

இலங்கை ரூபாய்க்கு நிகரான ஐக்கிய அமெரிக்க டொலரொன்றின் கொள்வனவு விலை கடந்த 2022 ஏப்ரல் மாதத்தில் 300 ரூபாயை விட குறைவடைந்திருந்தது.

இந்நிலையில், மே 18ஆம் திகதி அதன் கொள்வனவு லிலை 299 ரூபாய் 21 சதமாகவும் விற்பனை விலை 312 ரூபாய் 37 சதமாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் 6ஆம் திகதியன்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 298 ரூபாய் 10 சதமாகவும் விற்பனை விலை 308 ரூபாய் 49 சதமாகவும் பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

திங்கட்கிழமை (12) டொலரின் கொள்வனவு விலை 290 ரூபாய் 06 சதமாகவும் விற்பனை விலை 303 ரூபாய் 73 சதமாகவும் பதிவாகி இருந்த நிலையில், செவ்வாய்க்கிழமை (13) கொள்வனவு விலை 294 ரூபாய் 91 சதமாகவும் விற்பனை விலை 309 ரூபாய் 22 சதமாகவும் அதிகரித்திருந்தது.

## ஜனாதிபதிக்கு பிரான்ஸ் ஜனாதிபதி அழைப்பு

உலக சமூகத்தை பாதித்துள்ள பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து இந்த மாநாட்டின் ஊடாக ஆராயப்பட உள்ளது.

காலநிலை மாற்றம் மற்றும் பல்லுயிர் இழப்பு முதல் கொவிட் -19 தொற்றுநோயின் தாக்கம் வரை, உலகளாவிய சமூகம் யுத்தங்கள் உட்பட பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.

இந்த சவால்களை எதிர்கொள்ள புதிய நிதி ஒப்பந்தத்தின் அவசியத்தை உணர்ந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், கூட்டு நடவடிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்துள்ளார்.

உச்சிமாநாட்டின் மற்றொரு நோக்கம், பலதரப்பு நிதித் துறையை மறுசீரமைத்தல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்த கார்பன் அற்ற உலகப் பொருளாதாரத்திற்கான பாதையை உருவாக்குவதற்கான கூட்டான பார்வை ஒன்றை உருவாக்குவதாகும்.

18வது ஜி20 தலைவர்கள் உச்சி மாநாடு புது டில்லியில் நடைபெறவுள்ளதோடு ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறித்த மாநாடு நியூயோர்க் மற்றும் துபாயில் நடைபெறவுள்ள கோப் 28 மாநாடு உள்ளிட்ட அடுத்த ஆண்டு சர்வதேச நாட்காட்டியில் உள்ள பிரதான கலந்துரையாடல்கள் மற்றும் உச்சிமாநாடுகளுடன் பிரிஜ்டவுண் முன்னெடுப்பு உள்ளிட்ட பல்வேற நிகழ்ச்சி நிரல்களை இணைக்கும் முயற்சிகளை பிரான்ஸ் மேற்கொண்டு வருகிறது.

> **கடந்த கால சாதனைகளை முறியடித்து பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் முதலீட்டை மேம்படுத்துவதற்கான அபிலாஷையை அடைவதற்கு இந்த மாநாடு பெரும் உதவியாக அமையும்.**

அரசாங்கப் பிரதிநிதிகள், சர்வதேச நிறுவனங்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறைச் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களின் கூட்டணியை உருவாக்குவதன் மூலம் ஒரு கூட்டான பார்வைக்குள் நிலையான எதிர்காலத்திற்கான தேவையான மாற்றங்களைச் செயல்படுத்துவதை இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

எதிர்கால சந்ததியினருக்கான சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்கேற்பிற்கு ய பிரான்ஸ் ஜனாதிபதி, தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

கடந்த கால சாதனைகளை முறியடித்து பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் முதலீட்டை மேம்படுத்துவதற்கான அபிலாஷையை அடைவதற்கு இந்த மாநாடு பெரும் உதவியாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உணவு பாதுகாப்பின்மை பிரச்சினை குறைந்துள்ளது

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு வேலைத்திட்டம் மற்றும் உணவு பாதுகாப்பு, விவசாய அமைப்பு ஆகியவை இணைந்து மேற்கொண்டுள்ள உணவு பாதுகாப்பு தொடர்பிலான மதிப்பீட்டு அறிக்கை இலங்கையின் உணவு பாதுகாப்புச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டுவதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

2023 மே 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட உணவு பாதுகாப்பு செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கை மக்கள் பார்வைக்காக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு பாதுகாப்பு, விவசாய அமைப்பின் த்தியோகபூர் இணைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி இணையத் தளத்தில் உண்மைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்படுகின்ற போதும் சில உள்நாட்டு ஊடகங்களில் வெளியிடப்பட்ட செய்திகளில் உணவு பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கையில் காணப்படும் தகவல்களுக்கு புறம்பான விடயங்கள் காணப்படுகின்றமை கவலைக்குரியது எனவும் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையில் இலங்கை சனத்தொகையில் 17% சதவீதமானவர்கள் அதாவது 39 இலட்சம் பேர் உணவு பாதுகாப்பின்மை பிரச்சினைக்கு ஆளாகியுள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் கடந்த வருடத்தின் ஜூன்/ஜூலை மாதங்களுடன் ஒப்பிடும் போது அந்த நிலைமை 40% சதவீத குறைவடைந்திருப்பதாகவும் உணவு பாதுகாப்பின்மை முகம்கொடுத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் 66,000 இல் இருந்து 10,000 வரையில் குறைவடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேற்படி விடயத்தை உணவு நுகர்வின் அதிகரிப்பாகவும் கருத முடியும் என்பதோடு, அறுவடைக் காலத்தில் விவசாய சமூகத்தினரின் குறைந்த உணவுச் செலவும் அதிக வருமானமும் இதற்கு காரணமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## 5,500 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் வெள்ளிக்கிழமை (16) வழங்கப்படுமெனவும் கல்வி அமைச்சர் உறுதிப்படுத்திய நிலையில், 7,500 பேர் புதிய ஆசிரியர் நியமனங்களைப் பெறவுள்ளனர்.

அரசாங்கம் பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்கி வருவதாகவும், நாட்டுக்கு சேவை செய்யும் ஒழுக்கமான மாணவர்களை உருவாக்குவது பாடசாலை நிர்வாகங்கள் மற்றும் ஆசிரியர்களின் கடமை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாடசாலை சீருடை, பொருட்கள், பாடப்புத்தகங்கள் மற்றும் பாடசாலை உணவுத் திட்டம் மற்றும் தேசிய பரீட்சை அட்டவணை தொடர்பான பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

2020 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை கடினமான காலகட்டத்தை கடந்துள்ளதாகவும், தற்போது ஒரு தேசமாக முன்னோக்கிச் செல்வதற்கு கூட்டு முயற்சி தேவை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## கடும் குற்றச்சாட்டுகளுடன் இடைக்கால மனு தாக்கல்

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் சேதத்துக்காக இழப்பீடு கோரும் செயல்முறையுடன் தொடர்புடைய முறைகேடுகள், தவறான கையாள்கை, நாசவேலை, இலஞ்சம் மற்றும் ஊழல் போன்ற கடுமையான குற்றச்சாட்டுக்கள் இம்மனுவில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இடைக்கால மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு முக்கிய விடயங்களில், எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் சேதத்துடன் தொடர்புடைய இழப்பீடு கோரிக்கையுடன் தொடர்புடைய அரச அதிகாரிகளுக்கு எதிரான கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவதாக, எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் சேதம் தொடர்பில் மஞ்சுசிறி நிசங்க என்றழைக்கப்படும் சாமர குணசேகர என்பவரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் 250 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வைப்பு செய்யப்பட்டுள்ளது என 2023 ஏப்ரல் மாதம் 25ம் திகதி நீதியமைச்சரினால் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அறிவிப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ல் சேதத்தினால் கடலில் குவிந்துள்ள கழிவுகளை அகற்றும் இயந்திரத்தை உருவாக்கியதாக கூறப்படும் சிந்தக்க வரகொட என்பவருக்கு அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேதங்களை முழுமையாக வெளிக்கொண்டு வருவதை தவிர்க்கும் வகையில் தனது இயந்திரத்தை பயன்படுத்துவதை நிறுத்தக்கோரி மற்றுமொரு தரப்பினர் பணம் கொடுக்க முயன்றதாக குற்றம் சாட்டும் அவரது ஊடக அறிக்கை மூன்றாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்காவதாக எக்ஸ்பிரஸ் பேர்ல் சேதத்தினால் இலங்கை பெற வேண்டிய சரியான தொகையினை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தோல்வி குறிப்பிடப்பட்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ல் என்ற சரக்குக் கப்பலானது 2021 மே மாதம் 20ம் திகதியன்று கொழும்புக்கு அருகே கடலில் தீப்பிடித்து சில நாட்களுக்கு பின்னர் அது கடலில் மூழ்கியது. இதன் போது அதிகளவான பிளாஸ்டிக் மற்றும் நச்சு இரசாயனங்கள் கடலை மாசடையச் செய்தது.

இச்சம்பவமானது இலங்கையில் மிக மோசமான கடல் சார்ந்த பேரழிவினை ஏற்படுத்தியது. விருப்புச் சார்பான முரண்பாடுகளுக்கு மத்தியில், எக்ஸ்பிரஸ் பேர்ல் சேதத்துக்கு பின்னரான நடவடிக்கைகளுக்கு கப்பல் காப்புறுதியாளரின் பிரதிநிதியின் உதவியினை இலங்கை அதிகாரிகள் நாடினர்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் சம்பவத்தினால் இலங்கையின் கடல் மற்றும் கடலோர சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட சேதங்களை கருதிற்கொண்டு உரிய தனிப்பட்ட தரப்பினரிடமிருந்து உரிய இழப்பீட்டினை பெற்றுக்கொள்ளல் மற்றும் மீனவ சமூகத்தினருக்கும் சுற்றுலா துறையில் ஈடுபடும் நபர்களுக்கும் ஏற்பட்ட இழப்புகளுக்கு அவர்களுக்கான இழப்பீட்டை பெற்றுக்கொடுத்தல் ஆகியவை உயர் நீதிமன்றத்திடம் கோரும் நிவாரணங்களில் உள்ளடங்கும்.

கடல் மாசு தடுப்புச் சட்டத்தின் கீழ் உரிய இழப்பீட்டை பெறுதல், வேண்டுமென்றே உதாசீனப்படுத்திய அல்லது தமது கடமைகளை சரியாக செய்தத் தவறிய அரச அதிகாரிகள் மீது வழக்குத் தொடுத்தல், அவர்கள் ஈடுபட்ட இலஞ்சம் அல்லது ஊழல் செயற்பாடுகளுக்கு எதிராக வழக்கு தொடுத்தல் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ல் சம்பவத்தினால் ஏற்பட்ட சேதங்களை அறிக்கைப்படுத்தல் என்பன ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனம் கோரும் ஏனைய நிவாரணங்களாகும்.

## கல்வியை அடிப்படை உரிமையாக மாற்றுவோம்

கல்வி அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்றாலும்,கல்வியில் கடுமையான வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் நிலவுவதாகவும், நாட்டில் வசதி வாய்ப்புகள் மற்றும் வளங்கள் குறைபாடுகள் ரீதியாக பாடசாலைகளுக்கு மத்தியில் இருந்து வரும் பிரிவினையும், சமத்துவமின்மையும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றார்.

ஸ்மார்ட் வகுப்பறைக்கான நவீன கற்பித்தல் உபகரணங்களை மொனராகலை கும்புக்கன பஞ்சானந்த மகா வித்தியாலயத்துக்கு வழங்கும் நிகழ்வில் புதன்கிழமை (14) கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஏற்றத்தாழ்வால் சமூக அநீதி தோன்றுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.தேர்தல் நலன்களைப் பெற்றுக் கொள்ளவும்,அரசியல் நலன்களை ஈட்டிக்கொள்ளவும் இந்த சமூக அநீதி என்ற வசனமே பிரயோகிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த சமூக அநீதியை இல்லாதொழிக்க பெரும் பதவிகளில் இருக்கும் நபர்களுக்கு எத்தகைய தேவையும் இல்லாதது போல் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

தலைநகர் மற்றும் கிராமப் புறங்களில் உள்ள பாடசாலைகள் சமமாக கவனிப்புக்குட்பட வேண்டும் என்ற போதிலும், தேர்தலுக்காக சிங்களம் மட்டும் என்று கூறும் ஒரு தரப்பால் இந்த ஏற்றத்தாழ்வு அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலை மாற்றப்பட்டு ஒவ்வொரு பாடசாலையிலும் ஆங்கில மொழி,தகவல் தொழில்நுட்ப அறிவியல் போன்றவற்றை கற்பித்து ஸ்மார்ட் குடிமகனை உருவாக்கும் பணி மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இப்பாடசாலைக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 2 ஏக்கர் காணி, பிரதேச அரசியல்வாதியொருவரினால் சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதான தகவல் பாடசாலை நிர்வாகத்தினரால் எதிர்க்கட்சித் தலைவரிடம் இதன் போது வெளிக்கொணரப்பட்டது.

பாராளுமன்ற அமர்வுகள் மீண்டும் ஆரம்பமான ஒரு நாளில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுடன் இணைந்து இந்த அநீதிக்காக பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் வாக்குறுதியளித்தார்.

## ஓகஸ்டுக்குள் ஒற்றை இலக்கத்தில் குறையும்

எவ்வாறாயினும், கடனில் மட்டுமே தங்கியுள்ள நாடாக இலங்கை முன்னோக்கி செல்ல முடியாது எனவும் இலங்கை முன்னோக்கிச் செல்வதற்கு அனைவரின் அனுமதியுடனும் கூடிய தேசிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்காத நிலையில் எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரப் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பணவீக்கமும் வெகுவாகக் குறைந்து வருகிறது, ஆனால் நாடு ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியேறி வருவதால் சந்தைகள் இயல்பு நிலைக்கு வர இன்னும் சில மாதங்கள் ஆகலாம் என்று அவர் ஒப்புக்கொண்டார்.

## செந்தில் பாலாஜிக்கு 28 வரை சிறை

இதையடுத்து, வழக்கு வேறு அமர்வுக்கு மாற்றப்படும் என்று தலைமை நீதிபதி அறிவித்தார்.

அமைச்சர் செந்தில்பாலாஜியை நீதிமன்றக் காவலில் வைக்க அனுமதி கோரி அமலாக்கத் துறை சார்பில், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதியிடம் முறையிடப்பட்டது. இதையடுத்து, செந்தில்பாலாஜி சிகிச்சைப் பெற்று வரும் ஓமாந்தூரார் அரசு மருத்துவமனைக்கு வந்த சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி நேரில் சென்று செந்தில்பாலாஜியிடம் விசாரணை மேற்கொண்டார்.

அப்போது, நீதிபதியிடம் அமலாக்கத் துறை சார்பில் நீதிமன்ற காவலில் வைக்க கோரி வலியுறுத்தப்பட்டது. அதேபோல், செந்தில்பாலாஜிக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியது அவசியம். எனவே அவரை நீதிமன்ற காவலில் வைக்க அனுமதி வழங்கக் கூடாது என்று திமுக வழக்கறிஞர்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

சுமார் 15 நிமிடங்கள் மருத்துவமனையில் இருந்த நீதிபதி, அமைச்சர் செந்தில்பாலாஜியின் உடல்நலம் குறித்த விவரங்களையும், அமலாக்கத் துறை மற்றும் திமுக தரப்பு வழக்கறிஞர்களின் தரப்பு கோரிக்கைகளையும் கேட்டதன் பின்னரே மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## கடவுச்சீட்டு அலுவலகம் முன்பாக 5 பேர் கைது

குறித்த செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 5 நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை வவுனியா மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த மே 30ஆம் திகதி இரவு தமது தேவைக்கு அல்லாது குறித்த பகுதியில் பணத்திற்காக வரிசையில் நின்றோர், சந்தேகத்திற்கிடமான முறையில் குறித்த காரியாலயம் முன்பாக ஒன்று கூடி நின்றோர் என 10 நபர்களை பொலிஸார் கைது செய்திருந்தரைமயும் குறிப்பிடத்தக்கது.

# இன்றுமுதல் ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்

இந்த முறையின் கீழ் கடவுச்சீட்டுகளை மூன்று நாட்களுக்குள் வீடுகளுக்கு அனுப்பப்படும் என்றும் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான கட்டணத்தை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின், வங்கிக் கணக்கில் வைப்பிலிடலாம் என்றும் குறிப்பிட்டார்.

கைவிரல் அடையாளத்தை அருகிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் வழங்க முடியுமெனவும் திணைக்களம் இதையடுத்து, மூன்று நாட்களின் பின்னர், பதிவுத் தபால் மூலம், விண்ணப்பதாரரின் வீட்டுக்கே, கடவுச்சீட்டு அனுப்பிவைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

# மன்னார் மாவட்ட வளங்களை பாதுகாக்க கோரி கவனயீர்ப்பு போராட்டம்

## அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

எஸ்.றொனேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களை பாதுகாக்க கோரி சூழல் பாதுகாப்புக்கான கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை (14) மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் கறிற்றாஸ்-வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில், மன்னாரில் உள்ள அலுவலகத்துக்கு முன்னால் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார் தலைமையில் கவனயீர்ப்பு பேரணி ஆரம்பித்து, மன்னார் மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்ததையடுத்து, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டி மேலிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; கறிராஸ்-வாழ்வுதயம் நிறுவனம், 'இயற்கை வளங்களை பாதுகாப்போம்' எனும் திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒன்பது கிராமங்களில் செயற்படுத்தி வருகிறது. இக்கிராம மட்டத்திலான சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இயற்கை வளங்கள் சுரண்டல் செயற்பாடுகளின் முக்கியமானவற்றை தங்களின் மேலான கவனத்துக்கு, தடுப்பு நடவடிக்கைகளுக்காக கோடிட்டுக் காட்டுகின்றோம்.

காற்றாலை திட்டத்தால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும், வெளிநாட்டுப் பறவைகள் வருகை குறைவு, மீன் உற்பத்தி குறைபாடு பற்றியும் கருத்தில் கொண்டு, பாதிப்பு தவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சட்டவிரோதமாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதால் அளவுக்கு அதிகமாக ஆறு ஆழமாக்கப்பட்டு உள்ளன. இதனால், கடல்மட்டம் உயரும் போது, ஆற்று நீருடன் உப்பு நீர் கலப்பதால், ஆற்றங்கரை கிராமங்களின் நிலத்தடி நீர் உவராக மாறியுள்ளது. குறிப்பாக, மடுக்கரை, தம்பனைக்குளம் கிராமங்களின் குடிநீர் கிணறுகள் உவராக மாறியுள்ளன. ஆற்று வித்தன்களில் உள்ள பெரிய மரங்கள் வேரோடு வீழ்த்தப்பட்டு விலங்குகள், பறவைகளின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

யுத்தம் நிறைவுற்று 2010ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு பாரியளவிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. முதிரை, பாலை, வீரை போன்ற பெரு மரங்களில் 70 சதவீதம் வரையானவை சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளன.

எனவே, மன்னார் வளங்களை பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கும் பொருட்டு, விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதாக குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மூதூர் பிரதேசத்தில் இறைச்சி விற்பனைக்குத் தடை

அ. அச்சுதன்

கிழக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள தோல் சார்ந்த நோய்களை கருத்திற்கொண்டு, மூதூர் பிரதேச சபைக்கு உட்பட்ட இறைச்சிக் கடைகளில் இறைச்சி விற்பனை மற்றும் உணவிற்காக மாடுகளை அறுத்தல் செயற்பாடுகள் மறுஅறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டிருந்தன.

எனினும், ஆங்காங்கே உணவகங்களில் மாட்டிறைச்சி உணவு வகைகள் விற்பனை செய்யப்படுவதாக, மூதூர் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், நேற்று முன்தினம் (13 ) வருமான பரிசோதகர்கள் குழு, தோப்பூர் பிரதேசத்தில் திடீர் சிவில் கள ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இதன்போது, சில உணவகங்களில் சட்டவிரோதமாக பெறப்பட்ட இறைச்சி காணப்பட்டதையடுத்து அவை கைப்பற்றப்பட்டு புதைக்கப்பட்டதுடன் குறித்த நபர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

# ஊவா, கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள் சந்திப்பு

ஹஸ்பர்

ஊவா மாகாண ஆளுநர் செயலகத்தில், ஆளுநர் முஸம்மிலை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் செவ்வாய்க்கிழமை (13) சந்தித்தார்.

இச்சந்திப்பில், கிழக்கு மாகாணத்துக்கும் ஊவா மாகாணத்துக்கும் இடையிலான சுற்றுலா, கைத்தொழில், கல்வி ஆகிய இருதரப்பு வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

# பொத்துவிலில் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு

எம்.எஸ்.எம் ஹனீபா

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில், பொது மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வரும் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட காணி நடமாடும் சேவை செவ்வாய்கிழமை (13) பொத்துவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண காணி ஆணையாளர் றுகான் தஸநாயக்க தலைமையில் நடைபெற்ற நடமாடும் சேவையில், பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பொத்துவில், கோமாரி, அறுகம்பே, செங்காமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் காணப்பட்ட காணிப் பிணக்குகளை குறித்த காணிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு, தெரிவு செய்யப்பட்ட 15 பிணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட தலைமைக் காரியாலய காணி உத்தியோகத்தர் கே.எல். எம். முஸம்மில் தெரிவித்தார்.

காணிகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல், எல்லையிடல், காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல், உரிமம் மாற்றம் செய்தல், காணி உறுதிக்கான விண்ணப்பம் செய்தல் போன்ற பிரச்சினைகளுக்கு அதே இடத்தில் தீர்வு காணப்பட்டதாகவும் நீண்ட காலமாக காணி உத்தரவுப்பத்திரம் வழங்கப்படாமல் இருந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் பயனாளிகள் 50 பேருக்கு காணி உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# மருதனார்மடத்தில் கறுவா செய்கை செயலமர்வு

வடக்கு மாகாணத்தில் கறுவா செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் இரண்டாம் கட்ட செயலமர்வு, மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண கல்லூரி விவசாய நிறுவனத்தில் நாளை வெள்ளிக்கிழமை (16) நடைபெறவுள்ளது

அன்றைய தினம் முற்பகல் 10 மணி தொடக்கம் ஒரு மணி வரையிலும் நடைபெறும் குறித்த செயலமர்வில், கறுவா ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர் கலாநிதி ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, வடக்கில் கறுவா செய்கை மேற் கொள்ளவதற்கான வாய்ப்புகள் குறித்து விளக்கவுரை நிகழ்த்துவார்.

அத்துடன், கறுவா ஆராய்ச்சி நிலைய அதிகாரிகளும் கலந்து கொண்டு பொது மக்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கவுள்ளனர். மேற்படி நிகழ்வில் ஆர்வம் உள்ள அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என ஏற்பாட்டாளர் சு. புவனகுமார் தெரிவித்தார். மேலதிக தகவல்களை க. ஐங்கரன் 0770629013 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

## 2023 ஆம் ஆண்டின் தரவரிசையில்

# கொழும்பு பல்கலைக்கழகம் முன்னேற்றம்

ஜூன் 2023 இல் டைம்ஸ் உயர்கல்வியின் (THE) தாக்கத் தரவரிசையின் ஐந்தாவது பதிப்பில் 401ஆவது 600ஆவது இடத்துக்கு இடையே கொழும்பு பல்கலைக்கழகம் முன்னேறியது.

Impact தரவரிசையானது பல்கலைக்கழகங்களுக்கான உலகளாவிய அளவுகோலாக செயற்படுகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs). ஒட்டுமொத்த தரவரிசையில் 601ஆவது முதல் 800ஆவது இடத்திற்கு இடையில் பல்கலைக்கழகம் நிலைநிறுத்தப்பட்டது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு தரவரிசையில் கொழும்பு பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்த ஆண்டு, ஒட்டுமொத்த தரவரிசையில் 112 நாடுகள்/ பிராந்தியங்களைச் சேர்ந்த 1,591 பல்கலைக்கழகங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

கடந்த சில ஆண்டுகளாக ஆராய்ச்சி, கற்பித்தல், சமூகம் மற்றும் பிற தொடர்புடைய துறைகளில் செய்யப்பட்ட படிப்படியான மேம்பாடுகளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னேற்றம் பிரதிபலிக்கிறது.

## வீட்டின் மீது மின்சாரம் தாக்கியதில்

# தச்சு தொழிலாளிகள் இருவர் உயிரிழப்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, அமிர்தகழி பிரதேசத்தில் வீட்டிக் கூரையை திருத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தச்சு தொழிலாளர்கள் மீது, மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று (14) பகல் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருதயபுரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ரொக்கி சைய்டே, கருவப்பங்கேணியைச் சேர்ந்த 25 வயதுடைய ஞானபிரகாசம் கோடிசன் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; அமிர்தகழி பாடசாலை வீதியிலுள்ள வீட்டுக்கு கொங்கிரிட் இடுவதற்காக, மூன்று தச்சு தொழிலாளிகள் கூரையை கழற்றி, திருத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன் போது, கூரையில் இருந்த தகரம் கழன்று, வீதியில் இருந்து வீட்டுக்கு வரும் மின்சார வயரை வெட்டியதையடுத்து, தொழிலாளர்கள் மீது மின்சாரம் தாக்கியுள்ளது. இதில், இருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதையடுத்து, 1919 அவசர அம்புலன்ஸ் சேவைக்கு தெரியப்படுத்தியதையடுத்து, அவர்கள் சென்று பரிசோதித்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்து காயமடைந்த 25 வயதுடைய இளைஞனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.

# விபச்சார விடுதி சுற்றிவளைப்பு; தாய்லாந்து அழகிகள் இருவர் கைது

கொள்ளுப்பிட்டியில் இரண்டு மாடிக் கட்டடத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பெரும் பணக்காரர்கள் வந்து செல்லும் வகையில் நடத்தப்பட்ட விபச்சார விடுதியை சுற்றிவளைத்து, தாய்லாந்து பெண்கள் இருவர் உட்பட ஐந்து பேரை கைது செய்ததாக பாணந்துறை வலன ஊழல் ஒழிப்பு செயலணி தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களில் இலங்கையைச் சேர்ந்த யுவதியும் முகாமையாளரும் இந்த விபச்சார விடுதியை நடத்தும் முன்னாள் இராணுவ அதிகாரியும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையை சேர்ந்த யுவதி, தனது ஏழு வயது மகளையும் குறித்த விபச்சார விடுதிக்கு அழைத்து வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளுப்பிட்டியில் விபச்சார நிலையம் இரகசியமாகக் நடத்தப்படுவதாக பாணந்துறை, வலன மத்திய ஊழல் ஒழிப்பு அதிரடிப் படையின் பணிப்பாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உதய குமாரவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றில் இருந்து பெறப்பட்ட தேடுதல் உத்தரவின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. பொலிஸ் சார்ஜன்ட், வாடிக்கையாளர் போன்று வேடமணிந்து, பெண் ஒருவரை 10,000 ரூபாய் கொடுத்து, அறைக்குள் அழைத்துச் சென்ற நேரத்திலேயே, இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தாய்லாந்து பெண்கள் இருவரிடமும் கடவுச்சீட்டுகூட இல்லை எனவும் கைது செய்யப்பட்ட 24 வயதுடைய இலங்கை பெண் சுமார் பத்து கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகளை வைத்திருப்பவர் எனவும், அவருக்கு மூன்று சொகுசு கார்கள், பிலியந்தலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மூன்று மாடி வீடு எனபன உள்ளன எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## காட்டு யானைகளிடம் இருந்து

# பாதுகாக்குமாறு கோரி ஆர்ப்பாட்ட பேரணி

பேரின்பராஜா சபேஷ்

தங்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் அழிக்கும் காட்டு யானைகளின் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாக்குமாறு கோரி, செங்கலடி - பதுளை வீதியை அண்டியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் புதன்கிழமை (14) ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், மறுமலர்ச்சி பெண்கள் அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணி, செங்கலடி - பதுளை வீதி சந்தியில் ஆரம்பித்து, பிரதான வீதியூடாக சென்று, ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலக முன்றலில் முடிவடைந்தது. அங்கு பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரத்திடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'எங்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையம் அழிக்கும் காட்டு யானைகளுக்கு தீர்வு வேண்டும்', 'எங்களின் உறவுகளை இழந்தது போதும்; உடமைகளை இழந்தது போதும்; அரசே உடனடித் தீர்வு வேண்டும்', 'எங்களை காப்பாற்ற அரசே கூடிய விரைவில் முடிவெடு', 'எங்களுடைய நெல், சோளம், தானியவகைகளை சேமித்து வைக்க முடியாமல் அழிக்கிறது', 'அரசே எங்களைக் காப்பாற்று' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவண்ணம் கோசங்களை எழுப்பி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஆசிரியர்கள் இடமாற்றத்தை கண்டித்து ஹைலன்ஸ் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

எம்.கிருஸ்ணா, எஸ். சதீஸ், ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் தசாப்தங்களை கடந்து பணியாற்றிய நிலையில், இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் அதே கல்லூரிக்கு நியமிக்க வேண்டுமெனக் கோரி புதன்கிழமை (14 ) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன், ஹைலன்ஸ் கல்லூரியின் முன்றலில் க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களால் மற்றும் அவர்களது பெற்றோர்கள் இணைந்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பாடசாலையில் முறையே 23, 15 மற்றும் 9 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையில் இருந்த மூன்று ஆசிரியர்கள் வேறு இடத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

உயர்தரப்பரீட்சை இடம்பெறவுள்ள நிலையில், இவ்வாறான இடமாற்றம் வழங்கியமை மாணவர்களின் கல்வியையும் எதிர்காலத்தையும் பாதிக்கும் எனவும் அவர்களை மீண்டும் கல்லூரிக்கு நியமிக்க வேண்டும் எனவும் பெற்றோர்கள் தரப்பில் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கியதற்கு அமைவாக உரிய ஆசிரியர்கள் தமது கடமையை செய்ய வேண்டும் எனவும் மீறினால் அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சினால் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டதக்கதாகும்.

# காலம்கடந்து கண்டுபிடிப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை

நமது நாடு ஏன் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறவில்லை என்ற கேள்வியை ஒவ்வொருவரும் எழுப்பினால், ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் ஊழல், மோசடி, தரகுப்பணத்துக்காக தரக்குறைவான திட்டங்கள் உள்ளிட்டவையே பிரதான பதில்களாக இருக்கும்.

திருடர்களைப் பிடிக்க, திருட்டுக்குழுவைச் சேர்ந்த ஒருவனையே தலைவராக நியமித்தால், திருடங்கள் என்றுமே சிக்கமாட்டார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், திருடர்களை பிடிக்கும் நோக்கமில்லை. அதனால்தான், தங்களுக்கு ஆட்சியைத் தந்தால், திருடர்களைப் பிடித்துவிடுவோம் என எதிரணியினர் கோஷமெழுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இத்தனை ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தவர்கள் எவரும், திருடர்களைப் பிடிக்கவில்லை. எனினும், மாறிமாறி ஓரிரு குழுவினரே ஆட்சிப்பீடத்தில் இருக்கின்றனர். ஒருதரப்பினருக்கு எதிராக மற்றுமொரு தரப்பினர் விரல் நீட்டி குற்றஞ்சாட்டுவதிலேயே காலத்தை கடத்திவிடுகின்றனர்.

நல்லாட்சிக் காலத்தில், நிதி மோசடி விசாரணை பொலிஸ் பிரிவு என்றொரு பிரிவு இருந்தது. அந்தப் பிரிவால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், நல்லாட்சிக்கு முன்னிருந்த ஆட்சியில் நிதிமோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், இரண்டொரு முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்படுவதும் நீதிமன்றத்தின் ஊடாக பிணையில் விடுவிப்பதுமாக இருந்தது.

எந்தவொரு நபருக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. போதியளவான ஆதாரங்கள் இல்லை என்பதே இறுதி பதிலாக இருந்தது. எனினும், தேங்காய், மாங்காய் திருடர்களை பிடிக்கும் பொலிஸார், நீதிமன்றத்தின் ஊடாக அவர்களுக்கு கடுமையான தண்டனையைப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

இதேவேளை, கடந்தகாலங்களில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் எவ்வாறான ஊழல், மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பது தொடர்பிலான தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆக, அடிமட்டத்தில் இருக்கும் நிறுவனங்களில், பல ஆண்டுகளாக கணக்காய்வு செய்யப்படவில்லை என்ற தகவலும் கசிந்துள்ளது.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல், மோசடிகளை காலம்கடந்து கண்டுப்பிடிப்பதால், எவ்வித பிரயோசனமும் இல்லை. கண்டறியும் போது, அந்த நிர்வாகமே மாறியிருக்கும் இல்லையில், அதிகாரத்தில் இருந்தவர்கள், கட்சிமாறி, ஆளும் கட்சியுடன் இருக்கக்கூடும். சிலர் மரணித்திருக்கலாம். ஆகையால்தான், ஒவ்வொரு வருடமும் கணக்காய்வுக்கு உட்படுத்தி, குற்றமிழைத்தவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

நிதி,மோசடிகளை கண்டுபிடித்து, அதனூடாக அரசியல் இலாபம் தேடிக்கொள்வதற்காக பாராளுமன்றத்தில் கொக்கரித்துக்கொண்டிருக்காது, குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக தயவுதாட்சணியம் இன்றி, சட்டத்தை நடைமுறைப்படுத்தினால், அடுத்தடுத்து வருபவர்கள், சுரண்டலில் ஈடுபடமாட்டார்கள்; மக்கள் எதிர்பார்க்கும் அபிவிருத்தித் திட்டங்கள் கிடைக்கும்.

சாதாரண பதவியில் இருப்பவர் முதல், உயர்பதவிகளை வகிப்போர் வரையிலும், இலஞ்சம் பெறுகின்றனர். இலங்கை போக்குவரத்து சபையின் முக்கிய பதவியில் இருப்பவர், பஸ் நடத்துநரிடமே இலஞ்சம் வாங்கி, கையும் மெய்யுமாகக் சிக்கிக்கொண்டார். ஆகையால், விசாரணைகளை துரிதப்படுத்தி, உரிய தண்டனை வழங்குவதே, தகுந்த பாடமாக இருக்கும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

எதுவும் கிடைக்கும் என்றோ, அல்லது எதுவுமே கிடைக்காது என்றோ மனதைப் பலவீனப்படுத்தக்கூடாது.

வெற்றிகளை நோக்கிப் பயணிக்கும்போது, சந்தேகம் வரவே கூடாது; அச்சமும் கூடாது. எங்களை நாங்களே பலப்படுத்த வேண்டும்.

சாதாரண விடயங்களைக் கூட, பதற்றத்துடன் செய்யும் நபர்கள் உண்டு. இதனால் வருவது குழப்பம்தான். பரீட்சைக்குப் போகின்றவர்கள் திருப்தியுடனும் நம்பிக்கையுடனும் செல்ல வேண்டும்.

எந்த நேரமும் எவரது பேச்சையும் காதில் வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதேபோல் பரீட்சை முடிந்த பின்னர், திருப்தி நிலையில் இருங்கள். தொடர்ந்தும் உங்கள் பாடங்களை மீண்டும் மீட்டி, மீட்டிப் படிக்கவும்.

எதிர்மறையாகப் பேசுபவர்களின் பேச்சுகளைக் கண்டுகொள்ளக் கூடாது. மனம் நுட்பமானது. அதைச் சிறந்த முறையில் நேரிய சிந்தனைக்குள் உட்படுத்த வேண்டும்.

எங்களை மிஞ்சி எதுவும் நடக்காது என்பதில் உறுதி பூணுக! எமக்கான காலங்களை சிறப்பாகப் பயன்படுத்துவோம்.

முன்னேற்றங்கள் ஒருவருக்கு மட்டும் சொந்தமானது இல்லை; அது பொதுவானது. இதை உணருங்கள்; மேன்மை பெறுங்கள்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சம்பந்தரை எரிச்சலூட்டிய ரணில்

புருஜோத்தமன்
தங்கமயில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், "... எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையில், தொடர்ந்தும் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதால் எந்தப் பயனும் இல்லை.." என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை கடந்த வாரம் இடம்பெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் டெலோ, புளொட் அமைப்புகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே கலந்து கொண்டிருந்தனர். இந்தப் பேச்சுவார்த்தையில், ஜனாதிபதியின் கருத்துகளுக்கு பதிலளித்து பேசும் போதே, சம்பந்தர் மேற்கண்ட கருத்தை கூறியிருக்கின்றார்.

கடந்த பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னர், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதியாக பதவியேற்ற சில நாள்களிலேயே ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தரப்புகளுடன் தொடர் பேச்சுவார்த்தைகளை அவர் நடத்தினார்.

அந்தப் பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ்த் தரப்பால் முன்வைக்கப்பட்ட அவசர கோரிக்கைகளில் ஒன்றிரண்டைத் தவிர வேறெதுவும் நிறைவேற்றப்படவில்லை. இதையடுத்து, ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளில் இருந்து கூட்டமைப்பின் பங்காளிகளாக இருந்த டெலோவும், புளொட்டும் விலகின. ஆரம்பத்திலேயே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சுகளைப் புறக்கணித்துவிட்டது.

இந்தநிலையில், சி.வி விக்னேஸ்வரனின் தமிழ்த் தேசிய கூட்டணியும் இலங்கை தமிழரசுக் கட்சியும் மாத்திரமே பேச்சுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தன. ஆனால், கடந்த வாரம், தமிழரசுக் கட்சியும், முன்னேற்றம் அற்ற பேச்சுகளில் தொடர்ந்தும் பங்களிப்பதால் பயனில்லை என்று விரத்தியோடு அறிவித்திருக்கிறது.

இப்போது, ரணிலோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், அவரின் அரசியல் திட்டங்களை தமிழ் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும் விக்னேஸ்வரன் என்கிற ஒற்றை மனிதர் மாத்திரமே தமிழ்ப் பரப்பில் இருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில், அதன் பாரம்பரிய விழுமியங்களை எந்த நிலையிலும் விட்டுக்கொடுக்காத அரசியல்வாதியாக சம்பந்தன் இருந்திருக்கிறார். அவருக்கு தேர்தல், வாக்கு அரசியலுக்கு அப்பாலான எந்தப் போராட்ட வடிவங்களின் மீதும் பற்றில்லை.

தமிழ் மக்களின் ஆயுத முனைப் போராட்டத்தை அவர், உள்ளூர வெறுத்தார். அரசியல் சூழலால், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுமைக்குள் இயங்கிய கூட்டமைப்பின் தலைவராக இருந்த போதிலும் கூட, அவர் ஆயுதப் போராட்டத்தை வெறுத்தார்.

எந்த அரசியல் முனைப்பும் பேச்சுவார்த்தை என்ற வடிவத்தில் முன்னெடுக்கப்பட வேண்டியது என்று இன்றும் நம்பியிருக்கும் சம்பந்தன், அரசியலில் 50 ஆண்டுகளைத் தாண்டிய அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். அந்தக் காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தோடும், இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகளுடனும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பேச்சுவார்த்தைகளிலாவது பங்கெடுத்திருப்பார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பரிமாறப்பட்ட நம்பிக்கை வார்த்தைகள், இணக்கப்பாடுகள் தொடர்பில் அவர் அதிக தடவை நம்பிக்கையோடு இருந்திருக்கிறார். மைத்திரி- ரணிலின் நல்லாட்சிக் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பொறுப்பில் இருந்தாலும், தானும் அரசாங்கத்தின் ஒரு பங்காளிபோலவே சம்பந்தன் இயங்கினார்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக, தமிழ் மக்களுக்கு தீர்வொன்றைப் பெற்றுவிட முடியும் என்று அவர் நம்பினார். அதனால், அவர் அடுத்த தீபாவளிக்குள் தீர்வு, பொங்கலுக்குள் தீர்வு என்று தொடர்ந்தும் கூறி வந்தார். அத்தோடு, எந்தளவு விட்டுக்கொடுப்பைச் செய்தாவது, தீர்வு என்ற பெயரில் ஏதாவது ஒன்றைப் பெற வேண்டும் என்று முயன்றார். ஆனால், சம்பந்தனின் எந்த முயற்சியையும் நல்லாட்சித் தரப்போ, தென் இலங்கையோ கண்டுகொள்ளவில்லை. மீண்டும் ராஜபக்ஷர்கள் ஆட்சியில் ஏறினார்கள். அப்போதும், ராஜபக்ஷர்களோடு பேச்சுவார்த்தைக்கு அவர் சென்றார்.

இப்போது, ரணில் வந்தபின்னரும், பல சுற்றுப் பேச்சுகளில் அவர் பங்கெடுத்திருக்கிறார். என்றைக்கும் பேச்சுவார்த்தைகளைப் புறக்கணிப்பது தொடர்பில் அவர் பேச்சே எடுப்பதில்லை. ஆனால், கடந்த வாரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது, பேச்சுவார்த்தைகளில் பங்கெடுப்பதில் பலனில்லை என்ற அறிவிப்பை விடுக்கும் நிலை வந்திருக்கிறது என்றால், அவர் எவ்வாறான ஏமாற்றத்தை தனிப்பட்ட ரீதியில் சந்தித்திருப்பார் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

புறக்கணிப்பு என்ற வார்த்தையை சம்பந்தன் பல நேரங்களில் ஆயுத முனைப் போராட்டங்களுக்கு ஒப்பான ஒன்றாகவே கருதியும் வெளிப்படுத்தியும் வந்திருக்கிறார். புறக்கணிப்புக் கோசத்தோடு களத்தில் இருப்பவர்களை, தீண்டத்தகாதவர்கள் மாதிரி சம்பந்தன் நடத்தியிருக்கின்றார். இன்றைக்கு அவரே, பேச்சுவார்த்தைகளைப் புறக்கணிக்கும் கட்டத்துக்கு வந்திருக்கிறார்.

ரணிலின் அடுத்த அரசியல் இலக்கு, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவது மாத்திரமே! அதற்காக யாரின் காலில் விழவும், காலை வாரவும் ரணில் தயாராக இருக்கிறார்.

அப்படிப்பட்ட நிலையில், தமிழ்த் தரப்புடனான பேச்சுவார்த்தையை தமிழ் மக்களின் வாக்குகளைக் கவருவதற்கான கருவியாகக் கையாள்வதற்காக மாத்திரமே கையாள்கிறார். ஏனெனில், அந்தப் பேச்சுகளில் காணப்படும் இணக்கப்பாடுகளை நிறைவேற்றினால், தென்இலங்கையின் பேரினவாத சக்திகளின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டி வரும். அது, தன்னுடைய அடுத்த தேர்தல் வெற்றியைப் பாதிக்கும் என்பது ரணிலுக்கு நன்றாகத் தெரியும்.

அதனால், தமிழ்த் தரப்பையும் வெளிநாடுகளையும் சமாளிப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாக சபை என்ற ஓர் அம்பை ஏவியிருக்கின்றார். அந்த அம்பை, விக்னேஸ்வரன் ஏந்திக் கொண்டிருக்கவும் செய்திருக்கிறார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட எதையும் இப்போதைக்கு நடத்துவதற்கு ரணில் தயாராக இல்லை. அதனை, அவர் கூட்டமைப்பினருடனான சந்திப்பில் அறிவித்திருக்கிறார். அதற்கு மாற்றாக, மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாக சபை என்ற விடயத்தை அவர் எடுத்திருக்கின்றார். அதுதான், சம்பந்தனை அதிகம் கோபம் கொள்ள வைத்திருக்கின்றது. அதற்காக, விக்னேஸ்வரனை ரணில் கூட்டுச் சேர்த்திருக்கின்ற விடயம், சம்பந்தனை எரிச்சல்படுத்தி இருக்கின்றது.

தமிழ்த் தேசிய அரசியலில் இருப்பவர்களில், இன்றைக்கு விக்னேஸ்வரன் மாத்திரமே கண்களை மூடிக்கொண்டு ரணிலை விசுவாசிக்கிறார். ரணிலை ஜனாதிபதியாக தேர்ந்தெடுப்பதற்காக வாக்களித்தது முதல், ரணிலின் திட்டங்களை வடக்கில் காவி வரும் ஒருவராக அவர் செயற்படுகிறார்.

விக்னேஸ்வரன் என்றைக்குமே தன்னுடைய கட்சிக்காரர்களிடமோ, அவரது கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களிடமோ எந்தவித ஆலோசனைகளையும் செய்வதில்லை. மாறாக, அவருக்கு கொழும்பில் இருக்கும் மூத்த சட்டத்தரணிகள் சிலர் வழங்கும் ஆலோசனைகளை உள்வாங்கிக் கொண்டு மாத்திரமே செயற்படுகிறார்.

அவர்கள் இன்றைக்கு ரணிலை ஆதரிக்கும்படி வழங்கிய ஆலோசனைகளை சிரமேற்று, ரணிலின் ஏவலாளி போல விக்னேஸ்வரன் செயற்படத் தொடங்கியிருக்கிறார். அதனால்தான், தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் நிராகரித்துவிட்ட மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாக சபை என்ற விடயத்தை, வடக்கில் சந்தைப்படுத்தும் வேலைகளில் அவர் ஈடுபடுகின்றார்.

தமிழ் மக்களுக்கான தீர்வை எந்தளவுக்கு கீழிறங்கியாவது பெற வேண்டும் என்பதற்காக நல்லாட்சிக் காலத்தில், சம்பந்தனும் எம்.ஏ சுமந்திரனும் 'ஏக்கிய இராஜ்ஜிய' விடயத்தை 'ஒருங்கிணைத்த நாட்டுக்குள்' என்று வியாக்கியானப்படுத்தி, தமிழ் மக்களிடம் சந்தைப்படுத்தி வந்தார்கள். அவர்களாவது, அரசியலமைப்புக்கு ஊடாக ஏதாவது அதிகாரங்களைப் பகிரும் விடயங்களை உள்ளடக்கலாம் என்ற நோக்கில் இயங்கினார்கள்.

ஆனால்,விக்னேஸ்வரன் இடைக்கால நிர்வாக சபை என்ற ஏதுமற்ற ஒன்றை காவி வருகிறார் என்பதை, என்ன அரசியலாக புரிந்து கொள்வது என்று தெரியவில்லை.

ஆட்சிக்கு வரும் தென் இலங்கையின் எந்தத் தலைவரும் தமிழ்த் தரப்புகளுடன் சம்பிரதாயபூர்வமாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பார்கள். அப்போது, தமிழ்த் தலைவர்களும் தங்களின் கோரிக்கைகளை முன்வைப்பார்கள். ஆனால், அந்தக் கோரிக்கைகள் குப்பைக்கூடைக்குள் வீசப்பட்டுவிடும். மீண்டும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும், அப்போதும் கோரிக்கைகளை தமிழ்த் தரப்பு முன்வைக்கும். மீண்டும் அவை குப்பைக்கூடைக்குள் வீசப்படும். இதுதான் வரலாறு.

ரணிலோடும் தமிழ்த் தரப்புகள் பலதடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றன. ஆனால், ரணிலும் ஒவ்வொரு முறை பேச்சுவார்த்தைக்கு வரும் போதும், கோரிக்கைகளை புதிதாக கேட்பது போல காட்டிக் கொள்கிறார். கடந்த பேச்சுவார்த்தையின் போதும் அவர் அப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறார். அதுவெல்லாம் சேர்த்துதான் சம்பந்தனை எரிச்சல்படுத்தி இருக்கின்றது; இனி பேச்சுவார்த்தைகளின் கலந்து கொள்வதில் பயனில்லை என்று அறிவிக்கவும் வைத்திருக்கின்றது.

சம்பந்தனின் ஏமாற்றம் புதிதில்லை. தமிழ் மக்களுக்கு நூற்றாண்டுகளாக பழக்கப்பட்ட ஒன்றுதான்! அந்தப் புரிதலோடு இருந்தால் போதும். அந்தப் புரிதல், தேவையற்ற போலி நம்பிக்கைகளை தென்இலங்கை ஆட்சியாளர்கள் மீது வளர்த்துக் கொள்வதைத் தடுக்க உதவியாக இருக்கும்.

## கடிதங்கள்

### காட்டுயானைகள் ஏற்படுத்திய சேதங்களுக்கு நட்டஈட்டு கோரிக்கை

கிழக்கில் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தொடர்பில் பல மட்டங்களில் இருந்தும் குரல்கள் ஒலித்துவருகின்றன. இதுகுறித்து, பொறுப்பு வாய்ந்தவர்கள் அக்கறையுடன் செயற்படவில்லை என்ற கருத்து பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

நேற்று (14) அதிகாலை, தோப்பூர், அப்ரார் நகர் கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானைகள், பயன்தரும் தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளன.

இதன்போது சுமார் 50 க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை காட்டு யானைகள் முறித்தும், தென்னை மர குருத்துகளை சாப்பிட்டும் சேதப்படுத்தியுள்ளன. அத்தோடு பாதுகாப்பு வேலிகளுக்கும் சேதம் விளைவித்துள்ளன.

தாம் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து பயிரிட்ட தென்னை மரங்களை, யானைகள் சேதப்படுத்தி உள்ளமையால் தாம் நட்டமடைந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு காட்டு யானைகளால் பாதிக்கப்பட்ட தமது தென்னைகளுக்கான நட்டஈட்டை பெற்றுத்தரவும், யானை பாதுகாப்பு வேலி அமைத்துத்தரவும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தோப்பூர் -அப்ரார் நகர் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தீஷான் அஹமட்

## கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல திருவிழா

கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா செவ்வாய்க்கிழமை (13) விமரிசையாக நடைபெற்றபோது, புனித அந்தோனியாரின் திருச்சொரூபம் பவனி வருவதையும் திருச்சொரூப ஆராதனையையும் காணலாம்.

–சண்

## கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தவிசாளர்

கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தவிசாளராக நியமிக்கப்பட்ட ஏ.பி மதனவாசன், தனது கடமைகளை திருகோணமலை காரியாலயத்தில் நேற்று (14) பொறுப்பேற்றுக்கொண்டார்.

அபு அலா

## ஊடக மயப்படுத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேச செயலக பிரிவுகளில் இடம்பெறுகின்ற அரச நிகழ்வுகள், அபிவிருத்தி செயற்பாடுகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் தொடர்பான செய்திகளை மாவட்ட ஊடகப் பிரிவுக்கு வழங்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு, மாவட்ட தகவல் அதிகாரி வடிவேல் ஜீவானந்தனின் தலைமையில் செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்றது. நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையை மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணன் வழங்கினார்.

எம்.எஸ்.எம் நூர்தீன்



## பஞ்ச ரத பவனி

கண்டி, வத்தேகம ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த தேர்த் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இதன்போது பஞ்ச ரதங்கள் பவனி வருவதைப் படங்களில் காணலாம்.

மெய்யன்

## தாகத்துக்கு நீர் போத்தல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'நிலையான சமாதானத்துக்காக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் கதிர்காம பாதயாத்திரை' தேசிய வேலைத்திட்டத்தில் கதிர்காம பாதை யாத்திரை செல்லும் தமிழ், சிங்கள இளைஞர்களுக்கு இன நல்லுறவை கட்டியெழுப்பும் நோக்கில் 'தாகத்திற்கு நீர் போத்தல்' வழங்கி வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (13) சாய்ந்தமருது வைத்தியசாலை முன்றலில் மாளிகா சந்தியில், சிலோன் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் போரத்தின் தலைவரும் சாய்ந்தமருது பிரதேச செயலக சமூர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளருமான கலாநிதி நியாத் ஏ.மஜீத் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது வைத்தியசாலை வைத்திய அதிகாரி டொக்டர் சனூஸ் காரியப்பரின் அனுசரணையில் 200 இளைஞர்களுக்கு தாக சாந்திகள் வழங்கப்பட்டது.

நூருல் ஹுதா உமர்

## சர்வதேச யோகாதினம்

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்லத்தில் சர்வதேச யோகா தினம், இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்றது. 200 மாணவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில், கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எம். செல்வராஜா உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டார்கள்.

வி.ரி சகாதேவராஜா

## சேவை வழங்குநர் சங்கங்களுடன் கலந்துரையாடல்

வவுனியா அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. திலீபன் தலைமையில், சேவை வழங்கும் சங்கங்களான முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், அரச பஸ் சபையினர், நகரசபை, வர்த்தகர் சங்கங்களுடனான கலந்துரையாடல் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

க. அகரன்

## பரீட்சை வழிகாட்டல் நூல் கையளிப்பு

திருகோணமலை மாவட்டத்தில், குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள திரியாய் மகா வித்தியாலயம், கும்புறுபிட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, கும்புறுபிட்டி கனிஷ்ட வித்தியாலயம், நாவற்சோலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவருக்கு ஒவ்வொன்றும் 1,680 ரூபாய் பெறுமதியான 'ஞானோதயம்' என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல் செவ்வாய்க்கிழமை (13) வழங்கப்பட்டது. வழிகாட்டி நூலுக்கான அனுசரணையைச் சுவிசர்லாந்தில் வாழும் கனகசபை யோகானந்தன் வழங்கியிருந்ததுடன் இவற்றை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் மாணவர்களிடம் கையளித்தார். கும்புறுபிட்டி வட்டார முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான ஜெயகாந்தன், புஸ்பகாந்தன் ஆகியோரும் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வடமலை ராஜ்குமார்

## பழங்குடியினர் கிராமத்தில் நடமாடும் சேவை

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில், பழங்குடி மக்கள் வாழும் நல்லூர் கிராமத்தில் நடமாடும் சேவை, 'இளைஞர் அபிவிருத்தி அகம்' நிறுவனத்தின் அனுசரணையில் புதன்கிழமை (14) நடைபெற்றது. இதனை மாகாண சுகாதார சேவை திணைக்களம், மாகாண சமூக சேவை திணைக்களம், மூதூர் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

தீஷான் அஹமட்

## சல்லியம்பதியில் திருவிழா

திருகோணமலை, சல்லியம்பதி சல்லி முத்துமாரியம்மன் கோவிலின் வருடாந்த திருவிழாவின் ஒன்பதாம் நாள் திருவிழா, நேற்று முன்தினம் (13) இரவு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

அ. அச்சுதன்

## குருதி கொடையாளர்கள் கௌரவிப்பு

சர்வதேச குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு, காத்தான்குடி தள வைத்தியசாலை குருதிக் கொடையாளர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பும் இரத்தான நிகழ்வும் நேற்று (14) நடைபெற்றது.

இதன் போது, பத்து தடவைகளுக்கு மேல் குருதி தானம் செய்த 42 குருதிக் கொடையாளர்களை பாராட்டி நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

காத்தான்குடி குருதிக் கொடையாளர்கள் சம்மேளனத்தின் தலைவரும் காத்தான்குடி தள வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரி டொக்டர் திருமதி அலீமா ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சுகுனன், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ். எம் ஜாபீர், காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய ஸ்ரீதர், காத்தான்குடி குருதிகொடையாளர் சம்மேளன செயலாளர் சமீம், பொருளாளர் முஹமது பிளாள் உட்பட வைத்தியர்கள், தாதியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதுவரை 52 தடவைகள் குருதிக்கொடை வழங்கிய சமூர்த்தி அபிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எச்.எம் இப்ராஹிம், 38 தடவைகள் குருதி கொடை வழங்கிய டொக்டர் துஷ்யந்தன், 35 தடவைகள் குருதி கொடை வழங்கிய ஸ்ரீலங்கா டெலிகொம் உத்தியோகத்தர் பசால் ஜிப்ரி ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

எம்.எஸ்.எம் நூர்தீன்

## அதிகார பகிர்வை வலியுறுத்தும் கலந்துரையாடல்

கிளிநொச்சியில் பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தால், ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை வலியுறுத்தும் வகையிலான கலந்துரையாடல், பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட கூட்டுறவு சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்றது

சுப்பிரமணியம் பாஸ்கரன்

## காத்தான்குடியில் பேரீச்சை பழங்கள்

இம்முறை ஏற்பட்டுள்ள கடுமையான வெப்பநிலை காரணமாக மட்டக்களப்பு, காத்தான்குடியில் பேரீச்சை மரங்கள் அதிகளவில் காய்த்துக் குலுங்குகின்றன. காத்தான்குடி நகர சபையின் பராமரிப்பில் இம்மரங்கள் கண்காணிக்கப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது.

எம்.எஸ்.எம் நூர்தீன்

# கைதான செந்தில் பாலாஜி கதறி அழுதார்

மதுவிலக்கு, மின்சாரம், ஆயத்தீர்வை ஆகிய துறைகளுக்கான அமைச்சராக பதவிவகிகும் செந்தில் பாலாஜி அதிரடியாக கைது செய்யப்பட்டார். அதனையடுத்து நெஞ்சு வலிப்பதாகக் கதறி அழுதார்.

தலைமைச் செயலக அலுவலகத்தில் நடத்தப்பட்ட நீண்ட சோதனைகளுக்குப் பிறகு அமலாக்கத்துறை அதிகாரிகளால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது நெஞ்சு வலிப்பதாக கதறி அழுத அமைச்சர் சிகிச்சைக்காக சென்னை ஓமந்தூரார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், செந்தில் பாலாஜியிடம் தொடர்ந்து 24 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டதாகவும் இது மனித உரிமைகளுக்கு எதிரானது எனவும் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி குற்றம்சாட்டியுள்ளார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள செந்தில் பாலாஜியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேரில் சென்று பார்த்தார்.

,இந்நிலையில், செந்தில் பாலாஜி மீது நடவடிக்கை எடுக்கக் கோரியவர் மு.க.ஸ்டாலின்தான் என்று பாரதிய ஜனதா கட்சியின் (பாஜக) தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

மேற்கு வங்காளம்

## தாயைக் கொன்று உடலை சூட்கேசில் மறைத்த மகள்

தனது தாய்க்கும், தனது மாமியாருக்கும் இடையில் அடிக்கடி ஏற்படும் தகரால், கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்த வைத்தியரான பெண், தனது தாயை படுகொலைச் செய்து சூட்கேசில் மறைத்துவைத்து, பொலிஸுக்கு எடுத்துச் சென்ற சம்பவம் மேற்கு வங்களாத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வைத்தியரான 39 வயதான அந்தப் பெண், தனது தாய் மற்றும் தன்னுடைய கணவர், குழந்தைகள், மாமியாருடன் பெங்களூருவில் குடியேறினார்.

உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள அவரது தாய்க்கும், மாமியாருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. இதனால் மன உளைச்சலுக்கு ஆளான பெண், தாய் உயிருடன் இருந்தால் தானே இந்தப் பிரச்சினைகள் எனக்கருதி, ஓர் அறையில் படுத்திருந்த தனது தாயின் கழுத்தை கைகளால் நெரித்து கொலை செய்துள்ளார்.

தாயின் உடலை சொனாலி திணித்து வைத்துள்ளார். பின்னர் அவர் அந்த டிராலி பேக்குடன் அருகில் உள்ள மைக்கோ லே-அவுட் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அங்கிருந்த பொலிஸாரிடம், நடந்த சம்பவத்தை கூறி சரணடைந்தார்.

திருப்பதி

## அமைச்சருக்கு பாலாபிஷேகம்

சினிமா நடிகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் படங்களுக்கு பாலாபிஷேகம் செய்து தங்களது விசுவாசத்தை பொதுமக்கள் காட்டி வருகின்றனர்.

தெலுங்கானாவில் அமைச்சர் ஒருவரை பாராட்டி பொதுமக்கள் அவருக்கு நேரிலேயே பாலாபிஷேகம் செய்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தெலுங்கானா மாநில தொழிலாளர் நல அமைச்சர் மல்லா ரெட்டி. பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மகபூப்நகருக்கு சென்றார். அவருடன் கலால் துறை அமைச்சர் சீனிவாஸ் உடன் சென்றார். மகபூப் நகரில் உள்ள பி.கே ரெட்டி காலனியில் அமைச்சர்களை வரவேற்க பொதுமக்கள் பல்வேறு ஏற்பாடுகளை செய்திருந்தனர். அதில் ஓர் அங்கமாக, அமைச்சருக்கு பாலாபிஷேகம் செய்தனர்.

## மூன்றாவது குழந்தையை பெற்ற ஆசிரியை பணிநீக்கம்

மூன்றாவது குழந்தையை பெற்றெடுத்ததற்காக ஆசிரியை ஒருவர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள சம்பவம் இந்தியாவில் இடம்பெற்றுள்ளது.

மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த அந்த ஆசிரியை தன்னை மீண்டும் பணியில் சேர்க்க வேண்டும் என்று கோரி இந்தூர் உயர் நீதிமன்றத்தை அனுகியுள்ளார்.

அந்த ஆசிரியை, அரசு மேல்நிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வந்தார்.

அம்மாநில அரசின் சுற்றறிக்கையின் பிரகாரம், ஊழியர் மூன்றாவது குழந்தை பெற்றால் அவரைப் பணியிலிருந்து நீக்க முடியும்.

இந்த விதியின்படி, அனைத்து வகையான தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்று தன் தகுதியை நிரூபித்த ஒருவர், மூன்று குழந்தைகளின் பெற்றோராக இருந்தால் அவருக்கு அரசுப்பணி வழங்கப்படாது.

அப்பெண்ணுக்கு மூன்றாவது குழந்தை 2009ஆம் ஆண்டு பிறந்தது. ஆனால், 2020ஆம் ஆண்டுதான் அவருக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டது. அந்தப் புகாரின் அடிப்படையில் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

## சன்ஸ்கிரீன் திரவங்கள் நெதர்லாந்தில் இலவசம்

அதிகரித்து வரும் தோல் புற்றுநோயிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க அவர்களுக்கு சூரியக் கதிர்வீச்சிலிருந்து பாதுகாப்பு வழங்கும் சன்ஸ்கிரீன் திரவங்களை இலவசமாக வழங்க நெதர்லாந்து அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக கல்வி நிலையங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற பொது இடங்களில் சன்ஸ்கிரீன் திரவ விநியோக மையங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனா நெருக்கடியின் போது கிருமி நாசினிகளை பொது மக்களுக்கு விநியோகிக்க பயன்படுத்திய சாதனங்களை இதற்கும் பயன்படுத்தலாம் என யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## திங்களன்று மாரடைப்பு அதிகரிப்பதாக தகவல்

இதர தினங்களை விட வாரத்தின் முதல் வேலைநாளான திங்களன்று மாரடைப்பு அதிகரிப்பதாக, மருத்துவ ஆய்வு ஒன்று அதிர்ச்சி தகவல் தந்துள்ளது.

வார இறுதி விடுமுறை முடித்து, திங்கள் கிழமை பிறந்தாலே வயது வேறுபாடு இன்றி சகலரும் சங்கடங்களை உணர்வது வாடிக்கை. திங்களன்று காலையில் பாடசாலைகளுக்குச் செல்லும் குழந்தைகள் திடீர் காய்ச்சலை உணர்வதும், பணிக்கு செல்வோர் திடீர் தலைவலியை உணர்வதும் உண்டு.

விடுமுறையில் ஊறித்திளைத்திருக்கும் உடலும், மனதும் வேலைநாளின் அழுத்தத்தை வெறுப்பதுதான். திங்களன்று சில மணி நேரங்களை பல் கடித்து போக்கிவிட்டால், அதன் பின்னர் இயல்பான செக்குமாடு வாழ்க்கைக்கு பழகி விடுவோம்.

இப்படி சாதாரண தொந்தரவாக எழும், போலி காய்ச்சல், தலைவலிக்கு அப்பால், திங்களன்று அதிகரிக்கும் மெய்யான மாரடைப்பு குறித்து மருத்துவர்கள் கவலையுடன் எச்சரித்துள்ளனர்.

சுமார் 10 ஆயிரம் நோயாளிகள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ ஆய்வின் அடிப்படையில் இந்த அதிர்ச்சி உண்மை வெளிப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்தை பின்புலமாக கொண்டு மருத்துவக் குழு, 2013 -2018 ஆண்டுகளுக்கு இடையே அயர்லாந்தின் மருத்துவமனைகளை நாடிய 10,528 மாரடைப்பு நோயாளிகள் மத்தியில் ஆய்வு மேற்கொண்டது. அதில் கிடைத்த தரவுகளில் ஒன்று, மருத்துவர்களுக்கு ஆச்சரியமளித்தது.

அமெரிக்க உணவகத்தில்

## 'மோடிஜி மீல்ஸ்'

அமெரிக்க நியூ ஜெர்சியில் உள்ள இந்திய உணவகத்தில் மூவர்ண கொடி நிறத்திலான இட்லி உட்பட பல்வேறு இந்திய உணவு வகைகள் அடங்கிய 'மோடிஜி மீல்ஸ்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி இம்மாதம் 21ல் அமெரிக்கா செல்கிறார். அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் அளிக்கும் இரவு விருந்தில் ஜூன் 22ல் பங்கேற்கும் மோடி அமெரிக்க பாராளுமன்றக் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.



# இறுதி உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடிய மெஸ்ஸி

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவதற்கான எத்திட்டங்களையும் கொண்டிருக்கவில்லை என ஆர்ஜென்டீனாவின் அணித்தலைவர் லியனல் மெஸ்ஸி நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

கட்டாரில் கடந்தாண்டு நடைபெற்ற தனது ஐந்தாவது உலகக் கிண்ணத்தில் ஆர்ஜென்டீனாவுக்கு 35 வயதான மெஸ்ஸி கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

அத்தொடரில் மீண்டும் மீண்டும் அதே தனது இறுதி உலகக் கிண்ணமென மெஸ்ஸி தெரிவித்திருந்தபோதும், ஆர்ஜென்டீனாவின் பயிற்சியாளர் லையனல் ஸ்கலோனியும், அவரது சக வீரர்களும், இரசிகர்களும் 2026ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் மெஸ்ஸி விளையாடுவாரென நம்பிக்கையிலிருந்தனர்.

பயிற்சிப் போட்டியில்

## நெதர்லாந்தை வென்ற இலங்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளுக்கான பயிற்சிப் போட்டிகளில், புலவாயோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நெதர்லாந்துடனான போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:
நாணயச் சுழற்சி: இலங்கை
நெதர்லாந்து: 214/10 (45.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: சஹிப் ஸுல்பிஹார் 56 (64), தெஜா நிடமனுரு 41 (62), ஸ்கொட் எட்வேர்ட்ஸ் 35 (48) ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 3/19, மகேஷ் தீக்ஷன 2/36, தனஞ்சய டி சில்வா 2/19, சாமிக கருணாரத்ன 1/16, லஹிரு குமார 1/33, மதீஷ பத்திரண 1/44)

இலங்கை: 215/7 (37.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: தசுன் ஷானக ஆ.இ 67 (52), திமுத் கருணாரத்ன 47 (55) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிளேய்டன் புளோய்ட் 2/40, அர்யன் டுட் 1/30,. சஹிப் ஸுல்பிஹார் 1/39)

## உலகக் கிண்ணத்தைத் தவறவிடும் பிறேஸ்வெல்

நியூசிலாந்தின் சுழற்பந்துவீச்சு சகலதுறைவீரரான மிஷெல் பிறேஸ்வெல் கால் உபாதை காரணமாக ஆறு தொடக்கம் எட்டு மாதங்களுக்கு விளையாட மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கவுள்ள உலகக் கிண்ணத்தை 32 வயதான பிறேஸ்வெல் தவறவிடவுள்ளார்.



## மூன்று ஆஷஸ் டெஸ்ட்களில் விளையாடவுள்ள ஹேசில்வூட்

முதலாவது ஆஷஸ் டெஸ்டில் அவுஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேசில்வூட் விளையாடுவது சந்தேகத்துக்கிடமானதாகக் காணப்படுகிறது.

ஹேசில்வூட், மிற்செல் ஸ்டார்க் அல்லது ஸ்கொட் போலண்ட் ஆகியோரில் ஒருவர் விளையாட முடியாதென்ற நிலையில் போலண்டின் அண்மைய பெறுபேறு காரணமாக ஸ்டார்க் எதிர் ஹேசில்வூட்டாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் அண்மைய காயங்கள் காரணமாக முழுத் தொடரையும் விளையாட முடியாதென ஏற்றுக் கொண்டுள்ள ஹேசில்வூட், மூன்றை விட குறைந்த டெஸ்ட்களில் விளையாடுவது தன்னை ஏமாற்றமடைய வைக்கும் எனக் கூறியுள்ளார்.

## வட மாகாண வைத்தியர்கள், சட்டத்தரணிகள் இடையேயான போட்டிகள்

எம். றொசாந்த்

வட மாகாணத்தில் வைத்தியர்கள், சட்டத்தரணிகளிடையே சிநேகபூர்வமான கிரிக்கெட், வலைப்பந்தாட்டப் போட்டிகள் என்பன நடைபெறவுள்ளன.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த போட்டி யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது வருடமாக நடாத்தப்படவுள்ள கிரிக்கெட் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சியாக பெண் வைத்தியர்கள், சட்டத்தரணிகளிடையே முதன்முதலாக வலைப்பந்தாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது.

கடந்தாண்டு முதற்தடவையாக நடாத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் சட்டத்தரணிகள் அணி வென்றிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 15 ஜூன் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.